International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# வள்ளுவர் வலியுறுத்தும் ஊழ்: குறளாழி ஆ. இரத்தினத்தின் திறனாய்வுப் பார்வை

**து. சத்தியவாணி,** முனைவர்பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)
தமிழ்த்துறை, அழகப்பாபல்கலைக்கழகம், காரைக்குடி - 630 003
ORCID: https://orcid.org/0009-0005-0874-2521

**முனைவர் மு. சுதா,** போராசியர், தமிழ்த்துறை
அழகப்பாபல்கலைக்கழகம், காரைக்குடி- 630 003
ORCID: https://orcid.org/0000-0002-6938-7149

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியத்தில் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய சமயம் சாராத உலகப் பொதுமறைவான திருக்குறளை ஆ. இரத்தினம் ஆய்வு விருப்பத்தினால் ஆழ்ந்து நோக்கி அதன் நுட்பமானக் கருத்துகளைத் திறனாய்வு செய்து வெளியிட்டுள்ளார். திருக்குறன் ஊழ் அதிகாரம் கருத்து மாறுபாட்டுக்குரியதாக இருந்து வந்திருக்கிறது. அதன் உண்மைப் பொருளை அறிய வேண்டும் என்ற ஆவலினால், திருக்குறளை ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு ஆய்ந்துள்ளார். வள்ளுவர் உரைக்கும் இச்சொல்லை விதி என்ற பொருளுடையது என்பதற்கு வள்ளுவர் காலச் சொல் வழக்கினை முறைபடுத்தி ஆணித்தரமாகத் தக்க அடிப்படைச் சான்றுகளுடன் நிறுவுகின்றார். வள்ளுவர் வகுத்த ஊழதிகாரத்தில் (ஊழ்) எனும் சொல்லிற்கு உரையாசிரியர்கள் பழவினை, விதி என பொருள் தந்துள்ளார்கள். இச்சொல்லைத் தவிர வேறு ஒரு சொல் கூட பழவினையைக் குறிக்கும் சொல் இல்லை, இவற்றை வள்ளுவருக்கு முன் பழவினைப் பொருளில் வழங்கவில்லை. தமக்கு முன் வழக்கில் இல்லாத பொருளில் வழங்கினார் என்பது எள்ளுவர் நோக்குக்கும் போக்குக்கும் பொருந்தாது. ஒருவேளை எப்படியோ வழங்கினார் என்று கொண்டாலும், அவருக்குப் பின் வந்த புலவர் பெருமக்கள் அச்சொல்லை அப்பொருளில் வழங்கி இருப்பர். குறள் அறநூல் இவ்வுலக வாழ்வை விட்டு அவ்வுலக வாழ்வையே பெரிதாகக் கருதிப் பலவிதமான கற்பனைகளைக் கதைத்துக் கொணடிருக்கும் வறட்டுத் தத்துவ நூலன்று. மக்களின் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடித் தொழுக வேண்டிய ஒழுகலாறுகளை வகுத்துரைக்கும் வாழ்வு நூல். எல்லாரும் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழவேண்டும். எளிய மக்களும் கற்றுணர்ந்து நடந்து கடை தேற வேண்டும் என்னும் உள்ளுணர்வாலே வள்ளுவர் குறளை யாத்தார் என்பது எல்லாருக்கும் ஒப்ப முடி த ஒன்று எனவே இதற்கு பொருந்தும் பொருளை எடுத்துரைத்தும், இதற்கு பொருள் விளக்கம் தராததால் அச்சொல்லை அவர்காலத்தில் பெருவழக்காக வழங்கிய பொருளில்தான் வழங்கி இருக்க வேண்டுமே ஒழிய, புதிய (பழவினைப்) பொருளில் வழங்கி இருக்க மாட்டார் என்று அறுதியிட்டு உறுதியாக இவர் விளக்கியுள்ளார். திருக்குறளில் முன் பிறவியில் செய்த நல்வினை, தீவினை என்று குறிப்பிடல் பெரும்பாலும் பழவினைப் பொருளில் சொல்லப் படுகின்றது. அத்தகைய சொற்களையோ, முற்பிறவி, இப்பிறவி என்றோ தல்வினை, தீவினை என்றோ ஊழதிகாரத்தில் பத்துக் குறளில் ஒன்றில் கூடக் குறிக்கவில்லை என

குறிப்பிடுகின்றார். இவற்றிற்கு பொருந்தும் சொல்லையும், பொருளையும் சங்ககாலத்தின் முன் மற்றும் பிற்கால சொல் வழக்குகளை கொண்டுப் பொருத்தியுனார் என்பதும் அவ்வகையில் இவரின் திறனாய்வுப் பார்வை புதியச் சிந்தனைகளை ஆராய்ந்து விரித்துக் காண்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைக்கின்றது.

**முதன்மைச் சொற்கள்:** முறைமை, இரத்தினம், ஊழ், திறனாய்வு, பழவினை, சங்கஇலக்கியம்

**முன்னுரை**

திருக்குறள் ஊழதிகாரம் பற்றிய வள்ளுவரின சிந்தனை குறித்த ஆ.இரத்தினத்தின் ஆய்வுப் பார்வை இங்கு எடுத்துரைக்கப் படுகிறது. மேலும் ஊழ் (*Destiny*) என்பதற்கு சங்க இலக்கியத்திலும் அதனை அடுத்து வந்த வள்ளுவத்திலும் பொருள் கொள்ளப் பட்டன. இதற்கு மாறாக வள்ளுவத்திற்கு பின் வந்த இலக்கியங்களும் மற்றும் உரையாசிரியர்கள் பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர் போன்றோர் ஊழ் என்பதற்கு பழவினை (*Karma*) எனப்பொருள் கொள்வது எவ்வகையினும் பொருத்தமில்லை என்று இதன் உண்மைப் பொருளை உலகிற்கு உணர்த்த வேண்டும் என புதிய பார்வையில் ஆழ்ந்து உண்மைப் பொருளை உணர்த்திய ஆ. இரத்தினத்தின் திறனாய்வுப் பார்வையை இக்கட்டுரை விரித்துரைக்கிறது.

**ஊழ் - சொற்பயன்பாடு**

"சங்க இலக்கியங்களில் ஊழ் என்ற சொல்லுக்கு முதிர்தல் பொருள்களிலும், தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் முறை மையாகிய வளைகள் என்ற பொருளாலும், ஐம்பெரும் காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலையில் ஊழ் என்ற சொல் பழவினைப் பொருளில் வழங்க வில்லை என்பதனை எடுத்துக்காட்டியுள்ளார். இளங்கோவடிகள் 41 இடங்களில் ஊழ் என்னும் சொல்லுக்குப் பொருள் வழங்கி யுள்ளார். ஆனால் பழவினை எனும் பொருளில் ஊழ் என்ற சொல்லைத் தம் காப்பியத்தில் எங்கும் வழங்கவில்லை மேலும் சிலம்பில் ஊழ்வினை என்ற சொல் வருகின்றதே என்று கேட்கலாம் சிலப்பதிகாரத்திற்கு மிக பழமையான உரை அரும்பதவுரை அது ஊழ்வினை என்பதற்கு "முறைமையாகிய பழவினை" எனப் பொருள் தருகின்றது. மேலும் சிலம்பிலும், மணிமேகலையிலும் வரும் இரு பாடல்களின் அடிப்படையில் இரண்டும் ஒரு காலத்தவை யல்ல என்பதனை ஆ.இரத்தினம் சான்று காட்டி விளக்கியுள்ளதன் மூலம் மணிமேகலை சிலம்பில் உள்ள ஊழ் எனும் பொருளோடு ஒத்திருக்க வாய்ப்பில்லை. மேலும் நாலடியார்க்கு உரை இயற்றிய பதுமனார் திருக்குறளை போல அதிகாரம் வகுத்தவர். அவ்வதிகாரங்களுக்கு பெயரிட்டவர் பதுமனாரே பழவினை பற்றிய வெளிப் படை யாகக் குறிக்கும் நாலடித் தொடர்கள் மற்றும் சொற்கள் ஒன்று கூட குறளில் ஊழ் இல்லாததாலும் பதுமனார் தம் நாலடியார் உரையில் ஊழ் என்னும் சொல்லை பழவினைப் பொருளில் வழங்கவில்லை என்பதனை திருக்குறள் ஆய்வாளர் ஆ.இரத்தினம் விளக்கியுள்ளார்.

**ஊழ்**

ஊழ் என்பது முன் வினைப் பயன் என்ற பொருள் தருமாயின் அவ்வதிகாரத்தில் பழவினை குறிப்பிடல் அடிப்படை- மற்ற அதிகாரங்களில் இவ்வுலகம் அவ்வுலகம்

இருமை

**அருள்இல்லார்க்கு அவ்வுலகம்**
**இல்லைபொருள் இல்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு** (குறள்.247)

**இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம்**
**பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு** (குறள்.23)

ஒவ்வோர் இடத்திலும் மறுமை

**சிறுமையுள் நீங்கிய இன்சொல்**
**மறுமையும்**
**இம்மையும் இன்பம தரும்** (குறள்.98)

**மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்**
**இனநலத்தின் ஏமாப்பு உடைத்து.**
(குறள்.459)

**மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்**
**வினையாண்மை வீறெய்தல இன்று.**
(குறள்.904)

**இன்மை எனஒரு பாவி மறுமையும்**
**இம்மையும் இன்றி வரும்.** (குறள்.1042)

நான்கிடங்களிலும்,

**எழுமை**

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**

**விழுமம் துடைத்தவர் நட்பு.** (குறள்.107)

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**(குறள்.126)

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.** (குறள்.398)

**முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை**
**பின்னூறு இறங்கி விடும்** (குறள்.535)

**ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்**
**தான்புக்கு அழுந்தும் அளறு.** (குறள்.835)

ஐந்திடங்களிலும் குறிக்கின்ற வள்ளுவர் அத்தகைய சொற்களையோ, முற்பிறவி, இப்பிறவி என்றோ, நல்வினை தீவினை என்றோ ஊழ் என்னும் அதிகாரத்தில் பத்துக் குறள்களில் ஒன்றில் கூடக் குறிக்கவில்லை என ஆ.இரத்தினம் தனது ஆய்வின் வழி எடுத்துரைப்பவை சிந்திப்பதற்குரியது.

**வள்ளுவர் ஊக்கப்படுத்துதல்**

வலியறிதல், காலம்அறிதல், இடன்அறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் முதலிய அதிகாரங்களால் செயலைச் சிந்திதது நெறியறிந்து செய்ய வழி காட்டுகிறார் வள்ளுவர். ஊக்க முடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை ஆகிய அதிகாரங்களால் உள்ளக் கிளர்ச்சியோடு சோர்வின்றித் துவளாமல் செயல் செய்யத் வினைசெயல் வகை முதலிய தூண்டுகிறார். வினைத்தூய்மை, வினைத்திட்பம், அதிகாரங்களால் குற்றமில் லாமல் உள்ளத்து உறுதியோடு செயல் செய்து முடிக்கும் திறனை வகுத்துரைக் கிறார்.

**ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தாற் செயின்.** (குறள்.484)

"காலத்தைச் சிந்தித்துத் தக்க இடத்தில் செய்தாய் ஆயின் உலகத்தையே வெல்லக் கருதினும் அது கைக்கூடும்" என்று மனித ஆற்றலின் மாண்பைப் புலப்படுத்துகிறார்.

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்.** (குறள்.666)

"நீ நினைத்ததை நினைத்தப்படியே அடையலாம் எல்லாம் உன் உள்ளத்து உறுதியில் இருக்கிறது" என்று உள்ளத்திற்கு உரம் ஊட்டுகிறார்.

**துன்பம் உறவிரினும் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை.** (குறள்.669)

"எத்தகைய இடுக்கனுக்கும் அஞ்சாதே, சோராதே, துவளாதே, துணிந்து நில் இன்பம் தரும் செயலைச் செய்". என்று மாளாத செயலுயிர்ப்பை ஊக்குகிறார்.

**மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற**
**இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.**
(குறள்.624)

"எத்தகைய சக்திக்கும் உன்னைத் தடுத்து நிறுத்துகிற ஆற்றலில்லை. பகடு அளற்று நிலம், மேடு முதலியவற்றில் அஞ்சாது, அயராது பாரச் சகடத்தை வலித்துக் கொண்டு செல்வது போல எத்தகைய தடைகளையும் உடைத்துக் கொண்டு முன்னேறு, முன்னேறு, முயன்று முன்னேறு என்று முன்னேற்ற முழக்கமிட்டு நம் நாடி நரம்புகளை முறுக்கேற்றுகிறார் வள்ளுவர். அப்படிப்பட்ட வள்ளுவர் "என்னதான் முயன்றாலும் எல்லாம் பழவினைப்படியே நடக்கும் எல்லாம் முன் செய்த வினையைப் பொருத்தது" என்று நம்மை ஊக்கம் குன்றி உள்ளம் சோர்ந்து ஒரு மூலையில் உட்காரச் செய்யும் ஊழ் வினையைப் பேசுவரா? அஃது அவர் உளப் பாங்கிற்குப் பொருந்தாது.

இவ்வாறு பொருந்தாதவற்றை எப்படி வள்ளுவர் கூறியிருப்பார் என ஆ.இரத்தினம் தனி மனித அறத்திற்கு ஆதாரமாய இருக்கின்ற சமுதாய நடைமுறையின் பேராற்றலை ஊழதிகாரத்தில் விளக்குகிறார் என்பதனை புதிய நோக்கோடும் வள்ளுவர் உள்ளப் பாங்கினை விளக்கியுள்ளதன் மூலம் இதன் உண்மைப்பொருள் என்னவாக இருக்கும் என்பது ஆராயத் தூண்டுகின்றன.

**இலக்கண - இலக்கியத்தில் ஊழ் என்பதன் பொருள்**

'ஊழ் அணிதைவரல்' (தொல்.பொருள்:262-2) (பெய்யப்படும் முறைமையவாகிய வளைகளை முன் கைமேல் இறுகச் செறித்தல்) என தொல்காப்பியத்தில் பொருள் கொள்ளப்பட்டன. சங்க இலக்கியத்தில் ஊழ் என்பதற்கு 'ஊழடி முட்டமும்' (குறிஞ்சி.258) முறையடிப் பாடாய் பின்பு வழி முட்டாய் இருக்கும் இடங்களும்) 'உருகெழுதாயம் ஊழின் எந்தி" (பட்டின.227) அச்சம் பொருந்திய அரசுரிமையை முறையாலே

பெற்று 'கழைவளர் நெல்லின் அரியுலை ஊழ்த்து' (மலை-180) ஊழ்த்து- செவ்வியழிந்து.

"ஊழிறந்து பெரும் பயம் கழியினும் (மலை.263,264) அவற்றால் கொள்ளும் பெரும் பயன் கொள்ளாமல் போகினும் முற்காலம் அடிப்பட்டுப் போந்த முறைமை யைக் கடந்து. 'நுண்கொடிப் பீரத்தின் ஊழுறு பூவென' (நற்.326-6) நுண்ணிய கொடிப் பீர்க்கின் மலர்ந்து கழியும் பழம் பூப்போல. **ஊழுறு தீங்கனி உதிர்ப்ப** (குறுந்.278-5) முதிர்ச்சியுற்ற இனிய பழங்களை உதிர்த்துவிட 'மின்னின்ற விளங்கினர் ஊழா' (பரி-8-14) மின் போலும் இணர் உதிராத.

'சீர்க்குத்தோளூழ் பெயர்ப்பவள் கண் (பரி.21 - 64, 65) சீர்க்கு இசையத் தோளைப் பெயர்ப்பவள் கண். 'நீணிழல் தளிர் போலும் நிறனூழ்த்தல் அறிவேனும்' (கலி.20-17) நீண்ட நழலினின்ற தளிர் போல வெளுத்தலை அறிந்திருப்பேன் ஆதலால். 'பல்லூழ் முயங்கல் இடையவது மன்னோ' (அகம்.2 - 16-17) பலமுறை முயங்குவது இயையுமோ. 'உழுதூர் காளை ஊழ்க்கோ டன்ன' (புறம் 322-1) நிலத்தை உழுது சோர்ந்து நடக்கும் காளையினது முளைத்த கோட்டைப் போல. முறைமை, செவ்வியழிதல், முற்காலம் அடிப்பட்டுப் போந்த முறைமை, மலர்தல், முதிர்ச்சி, உதிர்தல், இசைதல், வெளுத்தல், முறை (தடவை) முளைத்தல் முதலிய பொருள்களில் ஊழ் எனும் சொல் 94 இடங்களில் சங்க நூல்களில் வழங்குகின்றன.

அவை யாவன தொல்காப்பியம் 1. குறிஞ்சிப் பாட்டு-2, பட்டினப்பாலை-1, மலைபடுகடாம்-6,நற்றிணை-3, குறுந்தொகை-9. ஐங்குறுநூறு-4, பதிற்றுப்பத்து பதிகம் 1.பரிபாடல்-12, பரிபாடல் திரட்டு 1, கலித்தொகை 15.அகநானூறு 28, புறநானூறு 11ஆகிய வற்றில் ஊழ் எனும் சொல் 94 இடங்களில் வழங்குகின்றன என ஆ.இரத்தினம் புதியதோர் கோணத்தில் எடுத்துக்காட்டு வதால் வள்ளுவக் காலச் சொல் வழக்குகள் இவ்வாறு வழங்கப்பட்டு வந்தன என்பதை வெளிக்காண முடிகின்றது.

### சங்க இலக்கியத்தில் ஊழ் சொல் வழக்கு

சங்க நூற்பாக்கள் சில குறள்களுக்கு முந்தியன, சில பிந்தியன, சில சம காலத்தன. இவற்றில் ஓரிடத்திலும் ஒரு நூலினும் ஊழ் என்பது பழவினைப் பொருளில் வழங்கவில்லை. குறள் ஓர் அறநூல். இவ்வுலக வாழ்வை விட்டு அவ்வுலக வாழ்வையே பெரிதாகக் கருதிப் பலவிதமான கற்பனைகளைக் கதைத்துக் கொண்டிருக்கும் வறட்டுத் தத்துவ நூலன்று. மக்களின் அன்றாட வாழ்கையில் கடைப் பிடித்தொழுக வேண்டிய ஒழுகலாறுகளை வகுத்துரைக்கும் வாழ்வு நூல்.

எளிய மக்களும் கற்றுணர்ந்து நடந்து கடைத்தேற வேண்டும் உள்ளுணர்வாலே வள்ளுவர் குறளை யாத்தார் என்பது எல்லோருக்கும் ஒப்ப முடிந்த ஒன்று. வள்ளுவர் அதிகாரத் தலைப்புத் தருவதிலும் அதை ஐயம் திரிபு இல்லாமல் விளக்கு வதிலும் கண்ணும் கருத்துமாய் இருக்கும் வள்ளுவர் எளிய மக்களுக்கு புரியாத வகையில் வழக்கில் இல்லாத புதிய பொருளில் ஒரு சொல்லை (ஊழ்) வழங்குவாரா? ஒரு வேளை அப்படி வழங்கினார் என்றே கொண்டாலும் அப்புதிய பொருளுடைய சொல்லுக்கு விளக்கம் பொருள் கொடுக்காமல் விடுவாரா? விடமாட்டார்.

ஊழுக்குப் பொருள் - விளக்கம் தராததால் அச்சொல்லை அவர் காலத்தில் சங்க நூல்களில் பெரு வழக்காக வழங்கிய பொருளில்தான் வழங்கி இருக்க வேண்டுமே ஒழிய, புதிய பழவினைப் பொருளில் வழங்கி இருக்க மாட்டார் என்று அறுதியிட்டு உறுதியாகச் சொல்ல வேண்டும். எனவே திருக்குறள் காட்டும் ஊழுக்குப் பழவினைப் பொருளில்லை என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்று தருகின்றன ஊழ் என்னும் சொல்லின் பொருளை காலவரைய றைக் கொண்டும், வழங்கப்பட்டு வந்த வழக்கினை(முறைமை)க் கொண்டும் ஊழ் என்பதற்கு ஆ.இரத்தினம் சான்று தந்து விளக்கியுள்ளதால் வழக்கத்தில் உள்ள சொற்களை வள்ளுவர் வழங்கியிருப்பார் என்பது புலனாகின்றது.

### இளங்கோவும் அரும்பதவுரையும் தரும் சான்று

பழவினைப் பொருளில் குறள் ஊழ் அதிகாரம் படைக்கப் பட்டிருந்தால் வள்ளுவருக்குப் பின் வந்த புலவர் பெருமக்கள் அச்சொல்லை அப்பொருளில் வழங்கி இருப்பார்கள்

அல்லவா? சங்கப் பாடல்களில் சிலவாவது பிந்தைய காலத்தவையாகும். அவற்றில் ஒன்றில் கூட ஊழ் பழவினைப் பொருளில் வழங்கவில்லை. சங்க காலத்தை அடுத்து வந்தால் நமக்கு கிடைப்பது சிலப்பதிகாரம் இச்சிலப்பதிகாரம் குறளுக்கு இருநூறு ஆண்டுகளுக்குப் பின் தோன்றியது.

அக்காப்பியக் கதை பழவினையை அடிப்படை யாகக் கொண்டு பின்னப்பட்டது. முற்பிறவி யில் செய்த இரு வினைப் பயன் செய்தவனையே சென்றடையும் நியதி என்னும் பொருளில் உண்பதோர் வினை, உம்மைப் பயன், உம்மை வினை, ஊழ் வினை, ஈர்வதோர் வினை, ஓய்யா வினை, கடு வினை, கொடு வினை, தீத்தொழில், தீது, தீதுறவந்த வினை, தீவினை, தொல் வினை, தொல்லை வினை, பண்டை விளைவாகி வந்த வினை, பண்டை ஊழ் வினை, முதிர் வினை, மூதை வினை, வல் வினை, வினை, விதி, வெவ் வினை, எனப் பல்வேறு தொடர்களை (22) இளங்கோவடிகள் தம் காப்பியத்தில் 41 இடங்களில் வழங்குகிறார். ஆனால் பழவினை என்ற பொருளில் ஊழ் என்னும் சொல்லைத் தம் காப்பியத்தில் எங்கும் வழங்களில்லை. அச் சொல்லை வேறு பொருளில் வழங்குகிறார். 'காழியர் மோதகத்து ஊழுறு விளக்கமும்' (6 -137 சிலம்பு) (பிட்டு வாணிகர் முறை முறையாக வைத்த விளக்குகளும்) 'ஊழடி ஒதுக்கத்து' (10-92 சிலம்பு) ((முன்பு நடக்கும் முறையானே அடிவைத்து நடக்குமிடத்து) முறை என்னும் பொருளில் ஊழ் என்னும் சொல் வழங்கப்படுகிறது. பழவினையைப் பல்வேறு (41) இடங்களில் பல்வேறு (22) தொடர்களால் வழங்கிய இளங்கோ ஊழ் என்னும் சொல்லை வேறு பொருளில் (முறை) வழங்கியுள்ளார் என்பதும் இங்குச் சிந்திக்கத்தக்கது.

இளங்கோ குறளை நன்கு கற்றுத் தேர்ந்தவர். குறள் கருத்துகளை மட்டுமின்றி குறள் மொழிகளையும் பொன்னே போல் போற்றித் தம் காப்பியத்தில் இழைத்து அணி பெறச் செய்துள்ளமை குறளில் அவருக்கி ருந்த புலமையையும் ஆர்வத்தையும் புலப்படுத்தும் மேலும் இளங்கோ, குறளில் ஊழ் பழவினைப் பொருளைத் தருவதாய் இருந்தால் தாமும் அப்பொருளில் எங்கேனும் ஓரிடத்திலாவது வழங்கி இருப்பார் அல்லவா? அவ்வாறு வழங்காததால் குறளில் ஊழ் என்னும் சொல்லுக்குப் பழவினைப் பயன் என்னும் பொருளில்லை என்பது தெளிதவா கிறது.

சிலம்பில் ஊழ் வினை என்பதில் ஊழ் என்னும் சொல் வருகிறதே என்று கேட்கலாம். சிலப்பதிகாரத்திற்கு மிகப் பழமையான உரை அரும்பதவுரை. அது ஊழ்வினை என்பதற்கு "முறைமையாகிய பழவினை" எனப் பொருள் தருகிறது. வினைக்கு இளங்கோ தந்த உம்மை, உண்பது, ஒய்யா, ஈர்வது, கடுமை, கொடுமை முதலிய பல்வேறு அடை மொழிகளில் ஒன்றாக ஊழ் என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

அச்சொல்லுக்குப் பழவினைப் பொருளில்லை என்பதற்கு அரும்பதவுரை மேலும் ஒரு சான்றாகிறது என்ற கருத்தினை ஆ.இரத்தி னம் நிறுவுகின்றார். குறளுக்கு இருநூறு ஆண்டுகளுக்கு பிற்பட்டதுதானே சிலப்பதி காரம் இவற்றில் குறளில் உள்ள ஊழ் என்னும் சொல்லுக்கு சிலம்பில் சொற்வழக்கு கள் மாறியும் வந்திருக்கலாம் இவற்றை ஆராயும் போது ஊழ் என்பதற்கு சிலம்பின் அரும்பதவுரை சங்கஇலக்கியத்தில் சொல்லப் படும் பொருளுக்கு பொருந்தியுள்ளது.

**சிலம்பும் மேகலையும் ஒரு காலத்தனவா?**

சிலம்பில் 41 இடங்களில் பழவினையைக் குறிக்கும் ஊழ் என்னும் சொல்லைப் பழவினைப் பொருளில் வழங்காத போது மணிமேகலை அப்பொருளில் வழங்குகின்றது. ஊழ் என்பது பழவினைப் பொருளில் குறளில் வழங்கவில்லை என்பதற்கு சிலம்பு தரும் சான்றை மறுப்பது போலவும் அமைகிறது. எனவே சிலம்பும் மேகலையும் ஒரு காலத்த னவா எனச் சிந்திக்க வேண்டியுள்ளது. சிலம்பு புகார் நகரம் சிறப்பாக விளங்கிய நிலையில் இயற்றப்பட்டது.

"பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும் வீங்குநீர் வேலி உலகிற்கு அவன் குலத்தோடு ஓங்கிப் பரந்தொழுகலான்" (1:10-12 சிலம்பு) என்று புகார் நகரம் போற்றப் படுகிறது. ஆனால் மணிமேகலை "மடவரல் நல்லாய் நின்றன் மாநகர் கடல் வயிறு புக்கது காரணம் கேளாய்" (மணிமேகலை 25:175-176) என்று புகார் நகரம் மறைந்ததைக் கூறுகிறது. எனவே இரு நூல்களும் காலத் தால் வேறுபட்டன என்பது தெளிவாகிறது.

மேலும் இதை நன்கு ஆய்ந்த நாவலர் சோம சுந்தர பாரதியார் பல்வேறு சான்றுகளைக் காட்டி "காவிரிப் பூம்பட்டினம் கடல்கோளால் அழியும் முன்னே முன்னே இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்றினார். பின்னர் அந்நகர் முந்நீர் விழுங்கி முடிந்த காலத்தில் மணி மேகலைக் கதையை ஒரு சாத்தனார் என்பது இச்சான்றுகளாலே பாடினார் தோன்றுகிறது" என்று உரைப்பதும் ஒப்பு நோக்கத்தக்கது. எனவே இரு நூல்களுக்கும் இடையே கணிசமான கால இடைவெளி இருந்தது. சிலம்பில் காலப்பகுதியில் ஊழுக்குப் பழவினைப் பொருளில்லை என்பதும் மணிமேகலை காலத்தில்தான் ஊழ்வினைப் பொருளில் வழங்கத் தொடங்கியது என்பதும் இதனால் தெளிவா கும். வள்ளுவரை அடுத்து வந்த சங்கப் புலவராகிய இளங்கோவும் அப்பொருளில் வழங்காதது குறள் ஊழுக்கு பழவினைப் பொருளில்லை என்பதற்கு ஒப்பற்ற சான்றாகும் என ஆ.இரத்தினம் தனது ஆய்வின்வழி எடுத்துக்காட்டுதலில் இதுவரை எவரும் நினையாதப் புதிய பார்வை இங்கு வரவேற்கப்படுகின்றது.

**நாலடித்தொடர்கள் குறள் ஊழில் இல்லை**

நாலடியார்க்கு உரையியற்றிய பதுமனார் திருக்குறளைப் போல அதிகாரம் வகுத்தவர் என்பர் உ.வே.சா. அவ்வதிகாரங்களுக்கு ஏற்ற பெயரிட்டவர் பதுமனாரே எனபர். திருக்குறளை முழுவதும் பதுமனார் பின் பற்றியுள்ளார். குறள் ஊழ் அதிகாரத்தில் சொல்லப் பட்டக் கருத்துக்களையும் நாலடிப் பழவினைக் கருத்துகளையும் ஒத்து உறழ்ந்து பார்த்தால் நாலடியாரில்

**பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று**
**வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்- தொல்லைப்**
**பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த**
**கிழவனை நாடிக் கொளற்கு.** (நாலடி.10)

'பல பசுக்கள் நிற்கின்ற இடத்திலே ஓர் இளங்கன்றைவிட்டால் அது தன் தாயைத் தேடிக் கொள்ளும் திறனுடையதாகும். அது போல முன்பிறவியில் செய்தவினை செய்தவனைக் கண்டு சேரும் தன்மையுடை யதாகும். அதாவது பழவினைத் தனக்குரிய வனைத் தேடிச் சென்று தவறாது பற்றும் என்பது கருத்து. இக்கருத்து வினைப்பயன் பேசுபவற்கு அடிப்படையாது. இது குறள் ஊழில் இல்லை.

**உருவும் இளமையும் ஒண்பொருளும் உட்கும்**
**ஒருவழி நில்லாமை கண்டும்-ஒருவழி**
**ஒன்றேயும் இல்லாதான் வாழ்க்கை உடம்(பு) இட்டு**
**நின்றுவீழ்ந் தக்க(து) உடைத்து.** (நாலடி.102)

'உருவு, இளமை, பொருள், மதிப்பு முதலியன எல்லாரிடமும் ஒரே வகையாகப் பொருந்தாமை நேரில் பார்த்தும் (அதற்குக் காரணம் பழவினை என்றும் நல்வினைகள் செய்தால் அடுத்த பிறவியில் நல்வினைகள் செய்யாதிருத்தல் வீண் வாழ்க்கையாகும்." இக்கருத்தும் குறள் ஊழில் இல்லை.

**உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா**
**பெறற்பா லனையவும் அன்னவாம்; மாரி**
**வறப்பின் தருவாரும் இல்லை, அதனைச்**
**சிறப்பின் தணிப்பாரும் இல்.** (நாலடி.104)

'பனையளவினரான பெருமையுடையோர் சிலர் நாடோறும் பெருமை குறைந்து தினையளவினாராய்ச் சிறுத்து தமது மேன்மையை உள்ளத்தில் அடக்கிக் கொண்டு உலகில் உயிர்பொறுத்திருக்கின் றனர். இதற்குக் காரணம் முன்னை வினைப்பயனைத் தவிர ஆராய வேண்டியது வேறு என்ன இருக்கிறது' இப்பாடல் கருத்தும் 'குறள் ஊழில்' இல்லை.

**தினைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்**
**பனைத்துணையார் வைக்லும் பாடழிந்து வாழ்வர்;**
**நினைப்பக் கிடந்த தெவனுண்டாம் மேலை**
**வினைப்பய னல்லாற் பிற.** (நாலடி.105)

பல்கேள்வியால் நிறைந்த சான்றோர் விரைவில் இறக்க, கல்லாத மூடர்கள் நீண்ட நாள் வாழ்வது எவ்வாறு என்றால் கல்லாதவர் உள்ளத்தில் அறிவொன்றும் பிழிவு இல்லாததால் வெறுஞ்சக்கையென்று கற்பவன் அவர்களை ஒதுக்கிவிடுவதாகும்.

**பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவும்**
**கல்லாதார் வாழ்வ தறிதிரேல் – கல்லாதார்**
**சேதனம் என்னுமச் சேறகத் தின்மையால்**

**கோதென்று கொள்ளாதாம் கூற்று.**
(நாலடி.106)

'மக்களிற் சிலர் துன்பம் மிக்க உள்ளத்த வராய் எல்லாரும் காணும்படி பெரிய வீடுகளின் நெடிய தலை வாயில் நின்று பிச்சையேற்று உழல்வதெல்லாம் முன் செய்த தீவினைப் பயனால் எய்திய தென்னப்படும். இப்பாடலும், மேல் 194ஆம் பாடலும் இப்பிறவியில் நலிந்து துன்புறுவதற்குக் காரணம் முன்னை வினைப் பயனைத் தவிர வேறொன்றும் இல்லை என்று இறுதியாவும் உறுதியாகவும் கூறுகின்றன. இவ்வாறு ஊழ்க்குறள் ஒன்றுகூட பேசவில்லை என்பது மட்டுமல்ல குறளாசிரியர் மேற்கண்ட நாலடிக் கருத்தை மறுக்கும் மனநிலை உடைய வராகத் தோன்றுகிறார்.

**சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா**
**உறுகாலத் தூற்றாகா ஆமிடத்தே யாகும்**
**சிறுகாலைப் பட்ட பொறியும் அதனால்**
**இறுகாலத் தென்னை பரிவு.** (நாலடி.110)

'நாம் முன்காலத்தில் செய்த நல்வினை தீவினைகள் சிறுகுவதுமில்லை. முறை தவறும் வருவதில்லை, துன்பமுறுங்காலத்து (நாம் செய்த நல்வினை) வந்து உதவியாகா. அது அவ்வவ்காலத்தே வந்து தன் பயனூட்டும். ஆகையால் துன்பமுறுங்காலத்து வருந்துவதால் பயனென்ன? 'அன்றாங்கால் அல்லல் படுவதெவன் (379)' என்னும் குறளின் ஒருபகுதி கருத்து இந்நாலடிப் பாடலில் இருந்தாலும் இப்பாடலில் முதல் மூன்று வரிகளில் கூறப்பட்ட கருத்து பழவினைக்கு அடிப்படையானதாகும். இதுவும் குறள் ஊழில் இல்லை. ஆறு பாடல்களின் கருத்துக்கள் குறள் ஊழில் ஊழில் இல்லை. பழவினைப் பற்றிய நாலடித் தொடர்கள் வெளிப்படையாகக் குறிக்கும் சொல் ஒன்று கூட குறள் ஊழில் இல்லாததாலும் பதுமனார் தம் நாலடி உரையில் ஊழ் என்னும் சொல்லைப் பழவினைப் பொருளில் வழங்க வில்லை என்பது தெளிவாகக் கொண்டிருத் தல் புலனாகின்றது என ஆ.இரத்தினம் எடுத்துரைக்கின்றார். நாலடியார் உரை இயற்றிய பதுமனார் திருக்குறள் போல அதிகாரம் வகுத்தவர். ஊழதிகாரத்திற்கு நாலடியாரில் பழவினையென்று ஊழில் சொல்லப்படாதச் சொற்கள் கையாளப் பட்டுள்ளதால் திருக்குறளின் ஊழ் என்பதற்கு நாலடிப் பொருள் பொருந்தவில்லை என்பது தெள்ளத்தெளிவாகின்றன.

**உரைக் குழப்பங்கள்**

**செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல்** (குறள்.637)

நூல் வழிகளால் தொழில் செய்யும் திறங் களை அறிந்தபோதிலும், அவ்வப்போது நடக்கின்ற உலக இயற்கையினை அறிந்து அதனோடு பொருந்தச் செய்தல் வேண்டும். இவற்றை 'அப்பொழுது நடக்கின்ற உலக இயற்கை' என்று பரிமேலழகரும், 'உலக நடை' என்று மணக்குடவரும் பொருள் தருகின்றனர். இதே பொருள்தான் இக்குறளிலும்(374) கொள்ளப்பட வேண்டும். பழவினையைத்தான் இவ்வதிகாரம் பேசுகிறது என்பதை விடாப் பிடியாய்ப் பிடித்துக் கொண்ட உரையாசிரியர்கள் பழவினைப் பொருளை ஏற்ற முயல்வது குழப்பமே,

**இருவேறு உலகத்து இயற்கை திருவேறு**
**தெள்ளியர் ஆதலும் வேறு.** (குறள்.374)

உலகத்தில் ஊழினாலாகிய இயற்கை இரண்டு வகைப்படும். இரண்டு வேறுபட்ட தன்மையதாக இருக்கும். ஆதலால், செல்வம் உடையராதலும் வேறு அறிவுடைய ராதலும் (தெள்ளியராதலும்) வேறு. பரிமேலழகர் உலகத்து ஊழினாளாகிய இயற்கை இரண்டு கூறு. ஆதலால் செல்வமு டையராதலும் வேறு. அறிவுடையர் ஆதலும் வேறு என்றவாறு. 'உலகத்து இயற்கை' என்ற தொடருக்கு உலகத்து ஊழினாளாகிய இயற்கை என்று பொருள் தருகிறார். பழவினை உலக இயற்கையை ஆக்குவ துண்டா? பழவினை உலக இயற்கையை ஆக்கும் என்று எந்த தத்துவம் அல்லது எந்த நூல் கூறுகிறது? எனவே ஒவ்வொரு வருடைய பழவினையே அவரவருடைய உடல், அறிவு, பண்பு, முதலியவற்றைத் தோற்றுவிக்கும் என்பது பழவினைக் கொள்கைத் தத்துவம். பரிமேலழகர் உலகத்து இயற்கையை ஊழ் ஆக்கும் என்பது எவ்வாறு பொருந்தும்? மணக்குடவர் செல்வமுடைய வர் ஆதலும் தெள்ளியர் ஆதலும் வேறு வேறு ஊழினால் வரும். ஆதலால் இரண்டு வகையாதல் உலகத்தியல்பு என்றார். உலகத்தியற்கையை ஊழ் ஆக்கும் என்ற என்ற பரிமேலழகர் கருத்து மணக்குடவர்க்கு உடன்பாடில்லை. எனவே 'உலகத்தியல்பு'

என்ற நேரிய பொருளைத் தருகிறார். ஆனால் இவ்வதிகாரம் பழவினைப் பொருளு டையது என்ற கருத்தினால் செல்வமு டையர் ஆதற்கும் தெள்ளியர் ஆதற்கும் ஊழை ஏது வாக்குகிறார். இதனால் குறளின் பொருள் சிறப்பின்றிப் போவதை அவரால் தடுக்க இயலவில்லை. உரையாசிரியர்கள் பழவினையை அடிப்படையாக்குவதால் உரை கள் வள்ளுவரின் நடைமுறை வாழ்வுத் தத்துவத்தைச் சிதைத்துப் பொருந்தாப் பொருளாக்கி விடுகின்றன. பரிதியார் இக்குறளுரையில் பழவினையை மறைமுக மாகக் கூட புகுத்த முடியவில்லை. எனவே இவ்வதிகாரம் பழவினைப் பொருளைப் பேசவில்லை என்பதற்கு இவ்வுரையாசிரியர் களின் விளக்கங்களும் சான்றாகின்றன என ஆ.இரத்தினம் எடுத்துரைத்துள்ளார். எனவே உரையாசிரியர்கள் ஊழுக்கு பழவினை எனப் பொருள் கொள்வதற்கும் காரணம் என்ன? முன்னுக்குப்பின் முரணாக பேசுவதால் ஊழ் என்பற்கு சரியான பொருள் பொருத்தமின்றி போகின்றது.

**திருக்குறளின் நாதம் ஊழதிகாரம்**

சமுதாய நடைமுறை பேராற்றல் வாய்ந்த ஒன்று. அது ஆக்கம் தரும் நடைமுறை கேடுதரும் நடைமுறை என இருவகைப் படும். அவையே ஆக்கம் அழிவு, இன்பந் துன்பம், வாழ்வு தாழ்வு முதலிய எல்லா வற்றுக்கும் காரணம் ஆகின்றன. சமுதாய ஆக்கமே உன் ஆக்கம் சமுதாய அழிவே உன் அழிவு என்பதை மறந்து விடாதே. உன் வாழ்க்கை ஆக்கம் பெற வேண்டு மானால் சமுதாய நல்ல நடைமுறையை ஆக்கு. அழிவிலிருந்து காக்கப்பட வேண்டு மானால் சமுதாய தீய நடைமுறையை நீக்கு. மாற்று என்று சமூக வளர்ச்சிக்கு வழிவகுக்கும் ஊழ் அதிகாரம். அறநூலின் நோக்கம் புதிய நல்ல சமுதாயத்தை அமைப்பதுதானே? எனவே இவ்வதிகாரம் திருக்குறளின் நாதம் என்று சொல்லலாம் அன்றோ? என திருக்குறள் ஆய்வாளர் ஆ.இரத்தினம் எடுத்துரைப்பது சமுதாய எழுச்சிக்கு பயன்படும் விதமாக அமைந்து உள்ளது.

**உலகத்தியற்கை**

இன்றைய சமுதாயச் சிந்தனையாளர் கூறுவதை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே சிந்தித்துத் தெளிந்த வள்ளுவர் தனிமனித அறத்திற்கு ஆதாரமாய் இருக்கின்ற சமுதாய நடைமுறையின் பேராற்றலை ஊழதிகாரத் தில் விளக்குகிறார். வள்ளுவர் காலத்தில் உலகத்தியற்கை- சமுதாய நடைமுறை என்னும் பொருளை நுட்பத்தோடு விளக்கும் சொல்லாக வழங்கி வந்திருக்கிறது என ஆ.இரத்தினம் எடுத்துரைப்பது சிந்திப்பதற் குரியது. ஊழ்-உலகத்தியற்கை (சமுதாய நடைமுறை) என்ற பொருளே வள்ளுவர் கருத்திற்கு பொருந்துகிறது. ஊழதிகாரம் சமுதாய வாழ்வுக்கும் மாற்றத்திற் கும் வளர்ச்சிக்கும் உரமூட்டும் - புதிய உலகைப் படைக்கும் புரட்சிக் கீதமாக உலகத்தியற்கை (சமுதாய நடைமுறை) எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

**ஊழ் என்பதன் உண்மைப்பொருள்**

ஊழ் என்னும் சொல்லிற்கு மணக்குடவர், பரிமேலழகர், பரிபெருமாள் ஆகிய உரையா சிரியர்கள் பழவினையை அடிப்படையாக்கு வதால் உரைகள் வள்ளுவரின் நடைமுறை வாழ்வுத் தத்துவத்தைச் சிதைத்துப் பொருந்தாப் பொருளாக்கிவிடுகின்றன. பரிதியார் இக்குறளுரையில் பழவினையை மறைமுகமாகக் கூட புகுத்த முடியவில்லை. ஊழ் என்பதற்கு உலகத்தியற்கை என்ற தொடரை வள்ளுவர் வழங்குகிறார். முற்காலம் அடிப்பட்டுப் போந்த முறைமை" 'மலர்தல் முதிர்ச்சி' 'இசைவு' முதலிய பல பொருளில் வள்ளுவர்க்கு முன்னும் பின்னும் 'ஊழ்' என்னும் சொல் வழங்கியதையும் 'முற்காலம் அடிப்பட்டு போந்த முறைமை' என்பது முன் காலம் தொட்டு நடந்து வருகின்ற கொஞ்சம் கொஞ்சமாக பழையன கழிந்து புதியன புகுங்குது மலர்ந்தும் முதிர்ந்தும் புதிய சூழ் நிலைக்கு இசைந்தும் நடைபெற்று வருகின்ற முறைமை என்பதை விளக்கி நிற்கின்றது.

மலர்ச்சி, முதிர்ச்சி, இசைவு, முறைமை ஆகிய பொருள்களை ஒருசேரக் கொண்டு வள்ளுவர் எடுத்துக் கொண்ட சமுதாய நடைமுறையை உலகத்தியற்கை விளக்கி நிற்பது ஊழாகும் என உண்மைப் பொருளை நூலாசிரியர் எடுத்துக் காட்டுகின்றார். எனவே குறள் ஊழதிகாரம் பழவினைப் பொருளைப் பேசவில்லை என்பற்கு மேற்காணும் ஆணித் தரமாகத் தக்க அடிப்படைச் சான்றுகளுடன் ஆய்வாளர் நிறுவுகின்றார். இவற்றை பல்வேறு வகையாளும் ஆராய்ந்தும் ஊழ் என்பதற்கு

உலகத்தியற்கை (சமுதாய நடைமுறை) என்ற பொருளே பொருந்தி வந்திருக்கிறது.

## முடிவுரை

எத்தகைய தடைகளையும் உடைத்துக் கொண்டு முன்னேறு என்ற முன்னேற்ற முழக்கமிடும் வள்ளுவர், எல்லாம் முன் வினைப்படியே நடக்கும் என்ற ஊக்கம் குன்றும் பழவினைப் பயனைப் பேசமாட்டார் என்பதும்; ஊழ் அதிகாரத்தில் ஊழ் ஒரு சொல்லைத் தவிர வேறு ஒரு சொல் கூட பழவினையைக் குறிக்கும் சொல் இல்லை. ஊழ் வள்ளுவருக்கு முன் பழவினைப் பொருளில் வழங்கவில்லை. தமக்கு முன் வழக்கில் இல்லாத பொருளில் அச்சொல்லை வழங்கினர் என்பது வள்ளுவர் நோக்குக்கும் போக்குக்கும் பொருந்தாது.ஒரு வேளை எப்படியோ வழங்கினார் என்று கொண்டாலும், அவருக்குப் பின் வந்த புலவர் பெரு மக்கள் அச்சொல்லை அப்பொருளில் வழங்கி இருப்பர் அவரை அடுத்து வந்த சங்கப் புலவர் சிலரும், பழவினையை 22 வகையான தொடர்களால் 41 இடங்களில் குறிப்பிடும் இளங்கோவும் ஓரிடத்தில் கூட பழவினைப் பொருளில் 'ஊழ்' என்னும் சொல்லை வழங்க வில்லை என்பதும் நாலடியாரைத் தொகுத்துக் குறளை அடியொற்றிப் பால் அதிகார அடைவு செய்த பதுமனார் குறள் ஊழுக்கும் பழவினைப் பொருளில்லை எனக் கொண்டு நாலடியில் ஊழ் என அதிகாரப் பெயரிடாமல் பழவினை எனப் பெயர் தந்தார் என்பதும் விளக்கமாகின்றன. எனவே குறள் எழுக்குப் பழவினைப் பொருளில்லை என்பதும் பல்லாற்றாலும் வலிவும் தெளிவும் ஆகின்றன. மேலும் ஊழ் என்ற சொல்லுக்கு உலகத்தி யற்கை (சமுதாய நடைமுறை) எனும் பொருளை ஆ.இரத்தினம் பல்வேறு நூல்களையும் நுண்ணிதின் ஆய்ந்து அதன் உண்மைப் பொருளைத் தெளிவுப்படுத்துகின் றார். இதன் வழி இவரது ஆய்வுப் பார்வை யையும், ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு அணுகி தந்தருளியுள்ள திறன் வாய்ந்த ஆய்வு நோக்கும் போற்றுதளுக்குரியது.

## பார்வை நூல்கள்

1. ஆரூர்தாஸ், திருக்குறள் அகராதி மூலமும் சொல்லாக்கமும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-21, முதற்பதிப்பு, 2008.
2. இரத்தினம்.ஆ, இதுதான் வள்ளுவம், கலைக்கோ வெளியீடு, முதற்பதிப்பு, சென்னை, 2007.
3. இரத்தினம்.ஆ, திருக்குறள் ஆய்வு, கலைக்கோ வெளியீடு, திருவண்ணா மலை, 1992.
4. ஔவை துரைசாமிப்பிள்ளை.சு (உ.ஆ), பதிற்றுப்பத்து மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2008.
5. ஔவை துரைசாமி (உ.ஆ), புறநானூறு, இனியமுது பதிப்பகம், சென்னை, 2009.
6. ஔவை துரைசாமிப்பிள்ளை.சு, ஐங்குறுநூறு, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை, 2008.
7. ஔவை. துரைசாமிப்பிள்ளை, நற்றிணை, சாராதா பதிப்பகம், சென்னை, 2016.
8. சடகோபராமானுஜாசாரியர்.வை.மு, கிருஷ்ணமா சாரியார்.சே, நாலடியார் மூலமும் உரையும், ஸ்ரீகணேச அச்சுக்கூடம், சென்னை, 1914.
9. சாமிநாதையர்.உ.வே, குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1947.
10. சாமிநாதையர்.உ.வே, சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1978.
11. சாமிநாதையர்.வே, பத்துப்பாட்டு மூலமும் உரையும், கமர்ஷியல் அச்சுக்கூடம், இரண்டாம் பதிப்பு, சென்னை, 1918.
12. சோமசுந்தரபாரதியார்.ச, பழந்தமிழ்நாடு, வள்ளுவர் பண்ணை, சென்னை, 1999.
13. சோமசுந்தரனார் பொ.வே, சிலப்பதி காரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை-1, (1977).
14. திருஞானசம்பந்தம்.ச, தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், சென்னை, 2018.
15. நச்சினார்க்கினியர் (உ.ஆ), கலித்தொகை மூலமும் உரையும், நோபில் அச்சுக்கூடம், சென்னை, 1925.
16. பரிமேலழகர் (ஆ.உ), திருக்குறள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2017.
17. பரிமேலழகர் (ஆ.உ), பரிபாடல் மூலமும் உரையும், கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, 1918.
18. மோகனராசு. இ, கன்பூசியசும் திருவள்ளுவரும் கண்ட கல்வி, வள்ளுவர் கழகம் வெளியீடு, சென்னை, 1984.
19. மோகனராசு. கு, திருக்குறள் உரை வகைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2005.
20. வேங்கடசாமிநாட்டார்.ந.மு, அகநானூறு, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு, 2007.
21. வேங்கடசாமி நாட்டார்.ந.மு, ஔவைதுரைசாமிப் பிள்ளை.சு, மணிமேகலை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை,1994.